<u>நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம்</u>

திண்டுக்கல்.

முன்னிலை – திரு. எஸ். பாக்கியராஜ், பி.எஸ். ஸி., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, திண்டுக்கல்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் திங்கள்கிழமை

<u>CC No.271/2019</u>

அரசுக்காக
சார்பு ஆய்வாளர்,
திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையம்,
குற்றஎண். 636/2015 ..........குற்றமுறையிடுபவர்

//எதிராக//

கார்த்திகேயன் (52/2026),
த/பெ. கணேசன்,
E/34, MVM நகர்,
செட்டிநாயக்கன்பட்டி, திண்டுக்கல் .........குற்றஞ்சாட்டப்பட்ட நபர்

இவ்வழக்கு 06.03.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி பொது வழக்கறிஞர் நிலை – 2 அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இவ்வழக்கின் எதிரி கார்த்திகேயன் இவ்வழக்கு நிலுவையில் உள்ளபோது 14.05.2025 அன்று இறந்துவிட்டார் என்றும், எனவே திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் எதிரியின் 15.05.2025 ஆம் தேதியிட்ட இறப்பு சான்றிதழுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணை இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி குறிப்பாணையின் அடிப்படையில் இந்நீதிமன்றம் வழங்கும்

# <u>உத்தரவு</u>

இவ்வழக்கில் கார்த்திகேயன் என்பவர் மீது திண்டுக்கல் நகர் மேற்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற எண்.636/2015, பிரிவு 341, 296(b), 420, 506(ii) IPC ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் CC No. 271/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கு விசாரணை நிலையில் எதிரி கார்த்திகேயன் என்பவர் காலமாகிவிட்டதாக அரசு தரப்பின் மூலம் எதிரியின் 15.05.2025 தேதியிட்ட இறப்பு சான்றிதழுடன் குறிப்பாணை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது. எனவே எதிரி கார்த்திகேயன் என்பவர் மீதான இவ்வழக்கு அற்றுப்போய்விட்டது என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இவ்வுத்தரவு என்னால் பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.07.20 17:25:21 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்.